## முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்

## S.C. No. 39/2024

**LW 1 (PW1)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பராயலு | தொழில் | |
| த/பெ | தம்பு சீனுவாசன் | தேதி | 02.08.2025 |
| ஊர் | | வயது | |
| மாவட்டம்; | | | |

(02.08.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. 3 முதல் 7 மற்றும் **9** எதிரிகள் ஆஜர். **8** மற்றும் **10** எதிரிகள் ஆஜரில்லை பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் சொரப்பூர் கிராமத்தை சேர்ந்தவர். நான் வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன்.

21.10.2004 ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் எனது நிலத்தில் நான் இருக்கும்போது எனது நிலத்திற்கு பக்கத்து நிலத்தில் இருக்கும் வரதராமானுஜலு வகையறா வாய்க்காலில் மடை கட்டிவிட்டனர் . எனது நிலம் மேலே இருந்தது . எதிரிகளின் நிலம் கீழ்புறமாக இருந்தது . நான் அந்த மடையை திறந்துவிட்டேன் . அப்பொழுது எதிரிகள் பயங்கரமான ஆயுதங்களை எடுத்து வந்து என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் இது தொடர்பாக நான் வளவனூர் காவல் நிலையத்தில் புகார்

அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அது அ.,சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் இரண்டாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றம் விழுப்புரம் நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சி அழைப்பாணை அனுப்பப்பட்டது அப்பொழுது தான் எனக்கு வரதராமானுஜம், ஜோதி, ஸ்டாலின், அண்ணாதுரை ஆகிய நால்வர் மீது மட்டுமே குற்ற இறுதி அறிக்கை தாக்ல செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரிய வந்தது. மற்ற எதிரிகளையும் வழக்கில் சேர்க்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்து அதன் பிறகு மற்ற எதிரிகளை சேர்த்து கூடுதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் . எனக்கு சம்பவத்தின் போது இடது தோள்பட்டை மற்றும் இடது முன்னங்கையில் காயம் ஏற்பட்டது நான் சிகிச்சைகாக விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு சென்று வெளிபுற நோயாளியாக சிகிச்சை பெற்று கொண்டேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.</u>

சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.

(Sd/-M.S. Varalakshmi)
முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்